குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 126-2023

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ராமசாமி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சின்னராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 35 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 17.03.2026**

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கொட்டாவூர் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என் மனைவிக்கு சகோதரர் உறவு முறை ஆவார்கள். என்னுடைய மனைவிக்கு கொட்டாவூர் கிராமத்தில் என்

மாமனார் 50 செண்ட் நிலத்தை கொடுத்துள்ளார். அதை நாங்கள் அனுபவித்து வருகிறோம். அந்த நிலத்தில் கடந்த 30.03.2023ம் தேதி எங்களுடைய மாட்டை கட்டி மேய்த்துக்கொண்டு இருந்தோம். அதே நாள் காலை சுமார் 7.00 மணிக்கு அங்கு வந்த ஆஜர் எதிரிகள் இருவரும் பால் கறந்து கொண்டு இருந்த என்னையும் என் மனைவியையும் அந்த இடத்தில் இருக்க கூடாது என்று தகராறு செய்து ஆஜர் 2ம் எதிரி என்னை தேவியடிய பையா, கண்டாரொளிபையா என்று அசிங்கமாக திட்டிநீங்கள் இங்கு இருப்பதற்கு பதிலாக உன் பொண்டடியா என் கூட படுக்க வைடா என்று சொல்லி அசிங்கமாக பேசியதால் அவமானமாக இருந்தது. அதன் பிறகு ஆஜர் 2ம் எதிரி காலால் என்னை எட்டி உதைத்து என்னுடைய தாடையில் அடித்து கீழே தள்ளிவிட்டார்.

நான் கீழே விழுந்த பிறகு 1ம் எதிரி என்னுடைய உதட்டை கடித்து எடுத்துவிட்டு ஓடிவிட்டார்கள் அதன் பிறகு என் அப்பா சின்னராஜ் சூளகிரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்த்தார் அங்கு எனக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து பிறகு என்னை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் மீண்டும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் இருந்து அன்றேயே தினமே தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் நான் தருமபுரி அரசு மருத்துவமனையில் 7 நாள் சிகிச்சையில் இருந்தேன். நான் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **அந்த புகார்**

**வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். என் தந்தை தற்போது உயிருடன் இல்லை அவர் இறந்து சுமார் 2 ஆண்டுகள் ஆகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை வாய்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 126-2023

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. ரம்யா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.ராமசாமி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 28 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 17.03.2026**

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கொட்டாவூர் கிராமத்தில் குடியிருந்து சொந்தமாக மாடு வைத்து விவசாய தொழில் வருகிறேன். அ.சா.1 என்னுடைய கணவர். ஆஜர் எதிரிகள் என்னுடைய சித்தப்பா மகன்கள் ஆவார்கள். எங்களுடைய ஊரரான கொட்டாவூர் கிராமத்தில் என் அப்பா எனக்கு 1/2 ஏக்கர் புரோம்போக்கு நிலத்தில் மாடு கட்டி அனுபவித்துக்கொள்ள கொடுத்தார். நான் அந்த இடத்தை 3 வருடங்களாக நன்றாக தான் அனுபவித்து வந்தேன்.

சம்பவம் நடைப்பெறுவதற்கு 20 நாட்களுக்கு முன்பு எதிரிகள் எங்களிடம் பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள். கடந்த 30.03.2023 தேதி காலை சுமார் 7 மணிக்கு அந்த இடத்தில் என்னுடைய மாட்டை கட்டி பால் கறக்க போனேன். அப்போது 2ம் எதிரி அங்கு வந்து என்னை பார்த்து 4 பொட்ட புள்ள பெத்த உன் கூதி கிழிக்காலம் சொல்லி உனக்கு ஆம்பள புள்ள இல்லன்னு இந்த இடத்தை எடுத்து போலாம்முன்னு நினைக்கிறாரியா என்று அசிங்கமாக பேசினார். அவர் வந்த பிறகு 1ம் எதிரி வண்டியில் அங்கு வந்தார். அதன் பிறகு 2ம் எதிரியின் அம்மா சரிதா அங்கு வந்து என்னை பார்த்து அவருடைய 3 மகன்களுடன் படுத்து பிள்ளை பெற்றுக்கொள்ள இங்கு வந்தியா என்று அசிங்கமாக பேசினார். அதன் பிறகு என் பின்னால் வந்த என் வீட்டுக்காரர் சம்பவத்தை பார்த்து அங்கு வந்து 2ம் எதிரியிடம் இவ்வளவு நாள் ஒழுங்கதான இருந்திங்க இப்ப ஏன் பிரச்சனை பன்றிங்க எங்களுக்கு ஆம்பள புள்ள இல்லன்ன குத்தி காட்டிறியன்னு கேட்டார்.

அதற்கு ஆஜர் 1ம் எதிரி என் வீட்டுக்காரை தேவியடிய மகனே, கண்டரோலி மகனே உன் பொண்டடியா இந்த இடத்தை விட்டு கூட்டிட்டு போடான்னு அசிங்கமாக பேசினார் அதன்பிறகு 2ம் எதிரி என் வீட்டுக்காரை கன்னத்திலும் நெஞ்சின்மீதும் கையால் அடித்து கீழே தள்ளினார். அதன் பிறகு 1ம் எதிரி வாசு கீழே விழுந்த எனது கணவரின் உதட்டை கடித்து எடுத்து சென்றுவிட்டார். இரண்டு எதிரிகளும் அவர்கள் வந்த வண்டியில் ஓடி விட்டார்கள். அதன்பிறகு அங்கு வந்த எனது மாமனார் எனது கணவரை சூளகிரி அரசு அவரச சிகிச்சை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டு மருத்துவரின் அறிவுரையின் பேரில்

கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் அனுமதிக்கப்பட்ட உதட்டில் ஏற்பட்ட பலத்த காயத்திற்காக தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட எனது கணவர் அங்கு 7நாட்கள் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டார். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை வாய்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**

சி.சி. எண். 126-2023

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. மூர்த்தி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சின்னராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 41 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 17.03.2026**

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கொட்டாவூர் கிராமத்தில் குடியிருந்து கார்பேட்டர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடன் பிறந்த தம்பி ஆவார். அ.சா. 2 தம்பி மனைவி ஆவார். ஆஜர் எதிரிகள் என் தம்பி மனைவிக்கு சகோதரர் உறவு முறை ஆவார்கள். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் உள்ள முனீஷ்வரன் கோயில் அருகே என் தம்பியின் மாமனார் கொடுத்த நிலத்தில் ஆஜர் எதிரிகளுக்கும் என்னுடைய தம்பிக்கும் தகராறு நடந்து ஆஜர் எதிரிகள் என் தம்பியை அடித்தாகவும் 1ம் எதிரி வாசு என் தம்பியின் உதட்டை கடித்துவிட்டதாகவும் சொன்னார்கள். நான் சம்பவத்தை

கேள்விப்பட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் தம்பியை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டாதாக சொன்னார்கள். அதன் பிறகு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது என் தம்பியின் உதட்டின் வலது பகுதி கிழிந்து சதை இல்லாமல் ரொம்ப அசிங்கமாக இருந்தது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை வாய்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 126-2023

அ.சா. 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சக்திவேல் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சின்னராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 40 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 17.03.2026**

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கொட்டாவூர் கிராமத்தில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடன் பிறந்த தம்பி ஆவார். அ.சா. 2 தம்பி மனைவி ஆவார். அ.சா. 3 எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரிகள் அ.சா.2க்கு சகோதரர் உறவு முறை ஆவார்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு சம்பவ தினத்திற்கு 20 நாட்களுக்கு முன்பு அ.சா.2க்கு அவருடைய அப்பா கொடுத்த 1/2 ஏக்கர் நிலம் சம்பந்தமாக அ.சா.1 மற்றும் அ.சா.2 வை

அங்கு இருக்க கூடாது என எதிரிகள் இருவரும் பிரச்சனை செய்தார்கள். அது சம்பந்தமாக சம்பவத்தன்று எங்கள் ஊரில் உள்ள முனீஷ்வரன் கோயில் அருகே என் தம்பியின் மாமனார் கொடுத்த நிலத்தில் ஆஜர் எதிரிகளுக்கும் என்னுடைய தம்பிக்கும் தகராறு நடந்து ஆஜர் எதிரிகள் என் தம்பியை அடித்தாகவும் 1ம் எதிரி வாசு என் தம்பியின் உதட்டை கடித்துவிட்டதாகவும் சொன்னார்கள்.

எனது தந்தை காயம் பட்ட என் தம்பியை சூளகிரி அரசு அவசர சிகிச்சை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள் அதன்பிறகு என் தம்பியை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் சம்பவத்தை கேள்விப்பட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் தம்பியின் உதட்டின் வலது பகுதி கிழிந்து தொங்கி கொண்டு இருந்தது அவர் பேச முடியாமல் இருந்தார்.அதன் பிறகு என் தம்பியை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள் போலிசார் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு வந்து என் தம்பியிடம் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை வாய்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**